# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 10.5.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களாட்சியில் சட்டத்தின் மாட்சியே மேலானது என்பதாலும், சட்டம் மனித சமுதாயத்தின் மாண்பை பேணிக் காப்பதாலும், மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதாக சட்டங்கள் விளங்குவதாலும், சட்டக் கல்விக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், சட்டக் கல்வியின் தரத்தை சர்வதேச சட்டப் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக அமைக்கும் வகையில், ஸ்ரீரங்கத்தில் 100 கோடி ரூபாய் செலவில் தேசிய சட்டப் பள்ளி ஒன்றிற்கு நான் அடிக்கல் நாட்டினேன். இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த சட்டப் பள்ளிக்கான மாணவ–மாணவியர் சேர்க்கை விரைவில் நடைபெற உள்ளது.

தற்போது அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கைப் பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியருக்கு கல்விக் கட்டணத்தில் சலுகை அளிக்கப்பட்டு வருவதாகவும், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தில் சேர்க்கைப் பெறும் மாணவ–மாணவியருக்கும் இந்த கல்வி கட்டணச் சலுகை அளிக்கப்படுவதாகவும், ஆனால் சீர்மிகு சட்டப் பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) பயிலும் மாணவ–மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கப்படுவதில்லை என்றும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

எனவே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சீர்மிகு சட்டப் பள்ளியில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பிற்கான மாணவ–மாணவியர் சேர்க்கை அரசின் முகமையான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மூலம் தகுதித் தேர்வின் அடிப்படையில் நடைபெறுவதாலும், இந்தப் படிப்பு சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் மட்டுமே பயிற்றுவிக்கப் படுகிற காரணத்தாலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் மாணவ–மாணவியர் சேர்க்கை நடைபெறவில்லை என்றாலும், இதனைச் சிறப்பினமாகக் கருதி 2010–11 ஆம் கல்வியாண்டு முதல் இப்பள்ளியில் பி.ஏ.பி.எல்., (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியருக்கும் கல்வி கட்டணத்தில் சலுகை வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் மற்றும் சில சட்டக் கல்லூரிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் முதன் முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது சட்டக் கல்விக்கென தனியாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை தெற்காசியாவிலேயே முதன் முதலாக நிறுவினேன். இப்பல்கலைக்கழகத்தின் கீழ்

7 அரசு சட்டக் கல்லூரிகளும், 1 தனியார் சுயநிதி சட்டக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. மேலும், சீர்மிகு சட்டப் பள்ளி மூலம் இளநிலை மற்றும் முதுநிலை ஹானர்ஸ் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகம் தற்போது அமைந்துள்ள இடம் போதுமானதாக இல்லாததால் இங்கு பயிலும் மாணவ – மாணவியருக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர இயலாத நிலை உள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் மேலும் சிறப்புடன் இயங்கும் வகையில், இப்பல்கலைக்கழகத்திற்கென பெருங்குடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிர்வாக கட்டடம், நூலக கட்டடம், இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான வகுப்பறைகள் அடங்கிய கட்டடங்கள், மாணவ மாணவியர் விடுதிகள், உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்கங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான பல்கலைக்கழக வளாகத்தினை கட்டிட 59 கோடியே 27 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவியருக்கு விடுதி வசதி உள்ளது போல், மாணவர்களுக்கும் விடுதி வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 9,275 சதுர அடி பரப்பளவில், 15 அறைகள் கொண்ட விடுதி கட்டிடம் கட்ட 1 கோடியே 72 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 70 மாணவர்கள் விடுதி வசதி பெறுவர்.

தற்போது தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வரும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தர கட்டட வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு 17 வகுப்பறைகள், முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலக அறை கொண்ட புதிய கட்டடம் 44,509 சதுர அடி பரப்பளவில் 7 கோடியே 56 லட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நடப்பாண்டில் 240 மாணவர்களும், வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்கும் போது சுமார் 700 மாணவர்களும் பயன் பெறுவர்.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில் தற்போது உள்ள விடுதியில் சுமார் 38 மாணவர்களுக்கு மட்டுமே தங்கும் வசதி உள்ளது. வெளியூர்களிலிருந்து வந்து தங்கி கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் பலர் தனியார் விடுதி மற்றும் வாடகை வீடுகளில் தங்கியிருந்து சட்டப் படிப்பை மேற்கொள்கின்றனர். எனவே, கூடுதலாக 50 மாணவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயில ஏதுவாக, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இரண்டு தளத்துடன் கூடிய 9,362 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய விடுதிக் கட்டிடம் கட்ட 1 கோடியே 21 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியர் பயன் பெறவும், சட்டம் பயிலும் மாணவ–மாணவியருக்கான வசதிகள் மேம்பாடு அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*************